மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 109, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

109—

சமுதாயக் கூடம்

***9836—திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாநகராட்சி, கிருஷ்ணாபாளையம் பகுதி, 13-வது வட்டத்தில் வசிக்கும் ஆதி திராவிடர் மக்களுக்கு சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து மக்களுக்கு இராமர், முருகன்; இஸ்லாமிய மக்களுக்கு மாஷா அல்லா; கிறிஸ்தவ மக்களுக்கு ஏசுநாதர்; ஆனால், ஏழு கோடி தமிழ்நாட்டு மக்களுக்கும் குலதெய்வமான தாயின் திருவடி வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்களையும், பண்பாட்டுக்குரிய துணை முதல்வர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்கி என்னுடைய பதிலைத் தொடங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களின் எண்ணிக்கை, தேவையான இடம், போதுமான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைக் கணக்கில்கொண்டு சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அந்த வகையில் ஈரோடு மாநகராட்சி, கிருஷ்ணாபாளையம் பகுதி, 13-வது வட்டத்தில் வசிக்கும் ஆதி திராவிடர் குடியிருப்பில் சமுதாயக் கூடம் கட்டுவது குறித்த உறுப்பினரின் கோரிக்கை மக்கள்தொகை, போதுமான இடம் மற்றும் இதர ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள். கேள்வி கேட்க வேண்டும். நீங்கள் படிக்கக் கூடாது.*

2018 ஜூன் 1]

திரு. கே.எஸ். தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களின் அரணாக இருந்து தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களை தலைநிமிரச் செய்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். தமிழக மக்களின் நீண்டநாள் கோரிக்கையான காவேரியை மீட்டுத் தந்த காவிய நாயகன் தமிழக முதலமைச்சர் அவர்களையும், தென்பாண்டிச் சிங்கம், ஜல்லிக்கட்டு நாயகன் அண்ணன் துணை முதலமைச்சர் அவர்களையும், அத்திக்கடவு-அவிநாசி திட்ட நாயகன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.*

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்த சமுதாயக் கூடம் கட்டுவதற்காக சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, டெண்டர் விடப்பட்டு, பூமி பூஜை போடுகின்ற நிலையில் இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கடந்த ஆண்டு முக்கியமான கேள்வி ஒன்றைக் கேட்டிருந்தேன். தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு ஈமச்சடங்குகளுக்காக 2,500 ரூபாய் வழங்கப்படுகிறது. அந்த 2,500 ரூபாய் மிகக் குறைவாக இருக்கிற காரணத்தினாலே அதனை உயர்த்தித் தர வேண்டுமென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில், அதை 10,000 ரூபாயாக உயர்த்திக் கொடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே சொல்லி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லை என்றாலும், மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, நிறைவேற்ற வாய்ப்பு இருப்பின் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள்.*

திரு. கே.எஸ். தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மனோகரன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

110—

மாணவியர் விடுதி

***5091—திரு. அ. மனோகரன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி, இராயகிரி பேரூராட்சியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகின்றேன்.

(அ) மற்றும் (ஆ) வாசுதேவநல்லூர் தொகுதி, இராயகிரி பேரூராட்சியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்